மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டிக் கேட்க வேண்டும். சமயநல்லூர்பற்றி இப்போது கேட்கக் கூடாது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு எற்கெனவே இரண்டு கேள்விகள் அனுமதித்து விட்டேன். மறுபடியும் வாய்ப்பு தர முடியாது. (குறுக்கீடு). மற்றவர்கள் கேட்க வில்லை என்பதற்காக உங்களுக்கு வாய்ப்பு தர இயலாது. முறைகளை மாற்றிக்கொள்ள நான் தயாராக இல்லை. அமைச்சர் அனுமதித்தாலும் நான் அனுமதிப்பதற்கில்லை.

விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பு.

*வினா எண். 322—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) வரிசைப்படி மின் இணைப்பு விவசாயக் கிணறுகளுக்கு கொடுக்கும் திட்டத்தில் ஒரு கிணறுக்காக பல கம்பங்களைப் போட்டு ஒரு டிரான்ஸ்பார்மர் வைத்து மின் இணைப்பு கொடுப் பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப்படி புதிய டிரான்ஸ்பார்மர் வைத் துள்ளதில் மற்ற கிணறுகளுக்கு வரிசை பாராமல் (Seniority) மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இயலாது ; மனுச் செய்த தேதியின் அடிப்படையில் தான் மின் இணைப்புக் கொடுக்க முடியும்.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடியாது எனவும், வரிசைப்படி தான் கொடுக்க முடியும் என்றும் கூறியிருக்கிறார்கள். ஒரு கிணற்றுக்கு மின்சார இணைப்பு கொடுக்கும்போது வரிசையாக 6 கம்பங்கள் 10 கம்பங்கள் 15 கம்பங்கள் போட்டு ஒரு டிரான்ஸ்பார்மர் வைக்கின்றபோது லட்சக்கணக்கில் செல வாகின்றது. அப்படி வரிசையாக வருகின்றபோது 10 ஆண்டுகள் கழித்துத்தான் வரக்கூடிய நிலை இருக்கிறது. இந்த 10 ஆண்டுகளில் அந்த டிரான்ஸ்பார்மர் போட்டு மோட்டார் ஓட்டு

கிறபோது அரசுக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுகிறது. இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, செலவாகிறது என்பது உண்மை. ஆனால் அதேநேரத்தில் ஒரு மின் கம்பித் தொடரில் இருந்து வெகு தொலைவில் நிலம் வைத்து இருக்கிற ஒரே காரணத்திற்காக அந்த விவசாயிக்கு மின்சாரம் இல்லை என்று நிரந்தரமாக நாம் சொல்வது சரியல்ல. அந்த அடிப்படையில் செலவானாலும் பரவாயில்லை என்று இந்த வரிசைப்படி தருவதை நிறைவேற்றி வருகிறோம்.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, வரிசைக் கிரமம் என்று வைத்தாலும், அதிலே கம்பம் இருக்கின்றபோது பக்கத்திலே அப்படியே சர்வீஸ் கொடுக்கின்ற காரணத்தாலே புதிதாகக் கம்பம் நடாமல், அந்த டிரான்ஸ்பார்மரிலே இருக்கின்றவர்களுக்கு சீனியாரிடியைப் பார்க்காமலே கொடுப்பதற்கான திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு கம்பித் தொடருக்கு அருகிலே வருகின்றவைகளுக்கெல்லாம் இப்போதும் மின்சார சக்தி வழங்கப்படுகிறது. மற்றவைகளுக்குத்தான் இந்த வரிசை முறை. அதாவது ஆன் தி லைன் சர்வீஸ் இப்போது இருக்கிறது.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திற்குள்ள நிதி நெருக்கடி நிலையை மனதிலே வைத்து, இருக்கக்கூடிய நிதிநிலையை வைத்து அதிகமான மின்சார மோட்டார் இணைப்பைக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில் மின்சார வாரியம் அல்லது அரசாங்கம் தனது கொள்கையை வகுக்க முன்வருமா? குறிப்பாக எப்படி லைனுக்குக் கீழே உள்ள எல்லா இடத்திற்கும் முதலிடம் கொடுத்து சர்வீஸ் கொடுக்கிறார்களோ, அதேபோல ஒரு கம்பம், 2 கம்பம் எக்ஸ்டன்சன் செய்தாலும் கொடுக்கக்கூடிய திட்டங்களுக்கு பிரையாரிட்டி வகுத்து, நீண்டதூரம் அதாவது 10 அல்லது 5, 6 கம்பங்களுக்கு மேல் உள்ள இடங்களுக்கு லோ பிராயாரிட்டி கொடுத்தால் மின்சார வாரியம் அதிகமான பம்ப்செட்களுக்குக் கொடுக்க முடியும். விவசாயிகளும் உற்பத்தி செய்ய முடியும். அதிகச் செலவும் இல்லாமல் இருக்க முடியும். அதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 2

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பொருளாதார ரீதியில் நல்ல யோசனை. ஆனால் சமூக நீதியின் அடிப்படையில் இதைத் தவிர வேறு வழி, தற்போது மின்வாரியத்திற்கு இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது மின்வாரியத்திலே பின்பற்றப்படுகின்ற முறை, ஒரு குறிப்பிட்ட தேதி என்று வைத்துக் கொண்டு அந்தக் குறிப்பிட்ட தேதி வரையில் விவசாயிகள் கொடுத்திருக்கிற மனுக்களுக்கு மின் இணைப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட தேதியிலே அந்தத் தாலுகாவில் மின் இணைப்பு கொடுத்துவிட்டாலும் மற்ற தாலுகாக்களிலே அந்தக் குறிப்பிட்ட தேதிவரையில் மின் இணைப்புக் கொடுக்கின்ற வரையிலும் அவர்கள் காத்திருந்து அடுத்த காலத்திற்குள் செல்ல வேண்டிய நிலை இருப்பதால் இந்த முறையை மாற்றி ஒரு குறிப்பிட்ட தேதி என்று கொடுத்து விட்டால் மின் இணைப்பு முழுவதும் எல்லா பெண்டிங் அப்ளிகேஷன்களுக்கும் கொடுத்து விடலாம். அடுத்த காலக் கட்டத்தில் செல்கின்ற மாதிரி அரசு அனுமதியை விரைவில் கொடுக்க முன்வருமா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே சிக்கல் என்னவென்றால் ஏற்கனவே அந்த முறை கடைப்பிடிக்கப்படவில்லை. சில மாவட்டங்களில் 1964—65-ம் ஆண்டில் இருந்தே மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. சில மாவட்டங்களில் 1970—71-லிருந்துதான் மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே, ஒரு குறிப்பிட்ட தேதி வரையறை நிர்ணயித்து, அதற்கு முன் பெறப்பெற்றுள்ள மனுக்களை எல்லாம் பைசல் செய்யவேண்டும் என்கிற நிலை எடுப்போமானால் சில மாவட்டங்களில் வேலை நடக்கும். சில மாவட்டங்களில் யாருக்குமே வேலை நடக்காது. அங்கே இருக்கும் பணியாளர்களும் வேலை செய்ய இயலாது. விவசாயிகளும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, கொஞ்சம், இதைப் பகிர்ந்து நிறைவேற்ற மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களே 1965—66-ம் ஆண்டிலிருந்து அப்ளிகேஷன்கள் தேங்கியிருக்கின்றன என்று சொன்னார்கள். அது மாதிரி 10—15 ஆண்டுகள் தேங்கி இருக்கின்ற இடங்களில் கொஞ்சம் பிரியாரிட்டி கொடுத்து மின் இணைப்பு கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அது மாத்திரமல்ல, ஏற்கனவே மின் இணைப்பு கொடுத்து, கரண்ட் சரியாக வராமல் இருக்கும் இடங்கள் இருக்கின்றன, என்

1981 மார்ச் 2]

னுடைய தொகுதியில் இருந்து ஒரு 20-21 பேர் ஒரு டெபுடேஷன் மாதிரி இங்கே வந்து இருக்கிறார்கள். கரண்ட் ஒழுங்காக வரவில்லை. ஒரு 10-15 நிமிடம் தான் வருகிறது. அதனால் விவசாயிகள் அவஸ்தைப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு 3 அல்லது 4 மணி நேரம் ஒரு நாளைக்கு மின்சாரம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்தால் நல்லது, அதைச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின் இணைப்புகள் சம்பந்தமாக சட்டப்பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக் குழு நன்கு பரிசீலித்தது. அவர்கள் மின் வாரியத்திற்குச் சொல்லியிருக்கும் ஆலோசனை என்னவென்றால், எந்தெந்த மாவட்டங்களில் நீண்ட காலமாக மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றனவோ, அந்தந்த மாவட்டங்களுக்குக் கொஞ்சம் முன்னுரிமை தந்து, அதிகமான அளவிற்கு அந்த மனுக்களைப் பைசல் செய்ய மின் வாரியம் ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதை அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகிறது. இன்றுள்ள மின் நிலை பற்றி தனிக் கேள்வி போட்டால் விடை தர முடியும்.

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் பாதை புறம்போக்கு நிலத்தை நத்தம் புறம்போக்காக மாற்றுதல்

*வினா எண். 323—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவில்லிப்புத்தூர் வட்டம், கிருஷ்ணாபுரத்தில் வசிக்கும் அரிசன பொதுமக்களுக்கு பாதை புறம்போக்கு நிலத்தை வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு நத்தம் புறம்போக்காக தரம் மாற்றம் செய்யும் செயற்குறிப்பு தற்பொழுது என்ன நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இராமநாதபுரம் வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தில், 4·73 ஏக்கரில், 0·38 ஏக்கர் நிலத்தை 19 ஆதிதிராவிட மக்கள் ஆக்கிரமித்து வீடுகள் கட்டியுள்ளனர். இவர்களுக்கும், மேலும் வீடற்ற நபர்களுக்கும் வீட்டுமனை வழங்குவதற்கு ஏதுவாக மேற்படி நிலத்தில் 2.46 ஏக்கர் நிலத்தை, வண்டிப்பாதை புறம்போக்கிலிருந்து நத்தமாக வகை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் வீட்டு மனைப் பட்டா ஒப்படை வழங்கப்படும்.